4. தத்துவ த்ரய சிந்தனை

4.1 ஸ்வாமி தேசிகன் சில்லரை ரஹஸ்யங்களிலும் (ஸ்ரீஸம்ப்ரதாய பரிசுத்தி, தத்வபதவீ, தத்வ நவநீதம், தத்வ மாத்ருகை, தத்வ ஸந்தேசம், தத்வ ரத்நாவளி, தத்வ ரத்நாவளி ஹ்ருதயம், தத்வத்ரய சுளகம். தவிர ஸர்வார்த்த ஸித்தியிலும் (தத்வமுக்தா கலாபத்தின் வியாக்யானம்), ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் போன்ற பல இடங்களிலும் தத்துவங்களைப் பற்றி விவரமாக அருளினார்.

4.2 நற்கதி நோக்கும் சேதனன் ஸதாசாரியன் திருவடிகளைப் பற்றி முதலில் தத்துவங்களை (realities) விசதமாக அறிய வேணும்.

கடல் அமுதத்தைக் கடைந்து சேர்த்த
திருமால் அடி காட்டிய நம்
தேசிகர் தந்நிலை பற்றிச் சேர்ந்தோமே

- ஸ்வாமி தேசிகன், அமிருதரஞ்சனி 2

4.3 ஸ்ரீயப்பதியான நாரயணன் ஒருவனே பரப்ரம்மம். இது உயர்ந்த பர தத்துவம். மற்றவை எல்லாம் அவர தத்துவம்.

4.4 பகவான் ஒருவனே அனைத்து உலகத்து வஸ்துக்களையும் தாங்கி, நியமித்து, தனக்காகவே ஆள்கிறான். (Supports, Controls, Owns).

4.5 இவன் ஸ்வத: ஸர்வஜ்ஞனாய், ஸர்வசக்தியாய்ப் பரம காருணிகனாய், ஸர்வ சரண்யனாய், பரம் உதாரனாய், மோஷ ப்ரதனாய், முக்தப்ராப்யனாய், பரவ்யூஹ பஞ்ச ப்ரகாரனாய் இருக்கும்

- ஸ்வாமி தேசிகன், தத்வ பதவீ

பரதத்துவமாகிய எம்பெருமான் இயற்கையாகவே எல்லாம் அறிபவன், ஸர்வ சக்தி உடையவன். பரம க்ருபை உடையவன். ஸர்வருக்கும் ரக்ஷகன். பெரும் கொடையாளன். மோக்ஷத்தை அளிப்பவன். முக்தர்களுக்கு மோஷத்தை அளிப்பதோடு மட்டும் அல்லாது அவர்கள் ஆனந்திக்க தன்னையே வழங்குபவன். கல்யாண குணங்களை உடையவன். ப்ர, வ்யூஹ, விபவ, ஆர்த, அர்ச்சை என்னும் ஐந்து நிலைகளை உடையவன்.

4.6 எம்பெருமானைத் தவிர மற்றவை *அவர தத்துவம்*, தாழ்ந்தது. இது *சேதனன்* (sentient), *அசேதனம்* (non sentient) என இரண்டு.

4.7 தத்துவ ஞானத்தை ஆசாரியன் திருவடிகளிலே அறிந்து, அவருடைய திருவருளாலே பிராட்டியை புருஷகாரமாக பற்றி (mediatrix), தன்னிகரிலா எம்பெருமானிடம் ப்ரபத்தி செய்து (total unconditional surrender) பகவானின் கருணைக்கு (grace) பாத்திரமாகி ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு (liberation from birth/death cycle) உயர்ந்த புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை (Supreme Abode) அடைந்து நிலையான ஆனந்தம் (eternal bliss) பெறுகிறான்.

4.8 எழுத்துக்களின் சேர்க்கை *பதம்* (word). அந்த பதத்தின் பொருள் *பதார்த்தம்* (meaning of the word).

4.9 எல்லா *பதார்த்தங்களையும், ப்ரமாணம், ப்ரமேயம்* என இரண்டாக பிரிக்கலாம். அறிய வேண்டிய பொருள் *ப்ரமேயம்* (object of knowledge). அதை உள்ளபடியே காட்டுவது *ப்ரமாணம்* (Means of knowledge).

4.10 *ப்ரமாணம்* மூன்று வகை.

- *ப்ரத்யக்ஷம்* (perception). இது கண்ணால் பார்ப்பது, காதால் கேட்பவை போன்றவை.
- *அனுமானம்* (inference or deduction). யூகித்து அறிவது. புகை இருந்தால் அந்த இடத்தில் தீ இருக்கும் என்ற அறிவு.
- *சப்தம்* (verbal testimony). இது வேதம், ஸ்ருதி என்பது.

ப்ரமாணத்தின் விவரத்தை ஸ்வாமி தேசிகன் அருளிய *ஸ்ரீமத் ந்யாய பரிசுத்தி*யில் காணலாம்.

4.11 *ப்ரமேயம்* என்பதில் *ப்ர* என்பது உபஸர்க்கம். *மா* என்பது தாது. *யா* என்பது விகுதி (ப்ரத்யயம்). இது இரண்டு வகை. *அத்ரவ்யம், த்ரவ்யம்*. ஸ்வாமி தேசிகன் *ந்யாய ஸித்தாஞ்சனத்தில்* ப்ரமேயத்தை விவரமாக அருளினார்.

4.12 *அத்ரவ்யம்* (constant, invariable) எப்போதும் மாறாத நிலை உடையது. இது பத்து வகை. -- ஸத்துவம், ரஜஸ், தமஸ், ரூபம்

(நிறம் - Shape and color), சப்தம் (ஒலி - Sound), ரஸம் (சுவை - Taste), கந்தம் (வாஸனை - Smell), ஸ்பர்ஸம் (உணர்ச்சி - Touch), ஸம்யோகம், ஸக்தி.

4.13 *த்ரவ்யம்* என்பது உபாதானமான பொருள் (raw material). அது வேறாக மாறும். (changeable). மண் சட்டியாக மாறுகிறது. சட்டி உடைந்து களிமண்ணாவதுபோலே.

4.14 *தர்மம்* என்பது பொருளில் இருக்கும் குணம், தன்மை. இது அத்ரவ்யமானது. *தர்மீ* என்பது அந்த தர்மத்திற்கு ஆதாரமான பொருளாய் த்ரவ்யமாய் இருப்பது. பூ என்பது *தர்மீ*. அதன் ரூபம், கந்தம் என்பவை *தர்மங்கள்*. குடம் என்பது தர்மீ. அதற்கு உள்ள ரூபம் என்பவை தர்மங்கள்.

4.15 பொருளுக்கும் குணங்களுக்கும் உள்ள உறவை *தர்மம்-தர்மீ* பாவம் என்பர். *தர்மத்தைக் கொண்டே தர்மீயான ப்ரம்மத்தை ஸ்தாபிக்கிறார்*, எம்பெருமானார் ஸ்ரீ பாஷ்யத்தில்.

4.16 *த்ரவ்யம்* இரண்டு வகை. *ஜடம்* என்பது ஸ்வயம் ப்ரகாசமில்லாதது (non self-luminescent). வேறு ஒரு ஞானத்தாலேயே ப்ரகாசிப்பது. *அஜடம்* என்பது ஸ்வயம் ப்ரகாசமானது (self-luminescent).

4.17 *ஜடம்* என்பது தன்னைத் தானே காட்டாது. மற்றதைக் கொண்டே இதை அறிய வேணும். இது *ப்ரகிருதி*, *காலம்* என இரண்டு.

4.18 *அசேதனம்* என்பது தனியே தோன்றி, தனியே இருக்கும் தன்மை உடையது. மற்றொன்றை அண்டி இருக்க அவசியம் இல்லை. இது மூன்று. *ப்ரகிருதி* (primordial matter or nature), *காலம்* (time), *சுத்த ஸத்வம்* (pristine purity)

4.19 *ப்ரகிருதி* என்பது ஸத்வ, ரஜோ, தாமஸ குணங்களால் ஆனது. அதனால் அது மிச்ர தத்வம். சுத்த ஸத்வமோ ஸத்வ குணத்தால் மட்டுமே ஆனது. அதனால் அது அமிச்ர தத்வம்.

4.20 ஸ்தூலப்ரகிருதியிலும், ஸூக்ஷ்ம ப்ரகிருதியிலும் முக்குணங்களே சுக, துக்க, மோகங்களுக்கு காரணம். ஸ்ருஷ்டிக்காக

ரஜஸ்ஸையும், ஸ்திதிக்காக *ஸத்வத்தையும்*, ஸம்ஹாரத்திற்காக *தமஸ்ஸையும்* பகவான் அதிஷ்டானம் செய்கிறான்.

4.21 முக்குணங்களின் ஏற்ற தாழ்வுகள் பகவானின் ஸங்கல்பத்தால் உண்டாகி அந்த ப்ரகிருதியானது காரியங்களாக பரிணமிக்கிறது. *ப்ரகிருதி* ப்ரளய காலத்தில் ஸூக்ஷமமாய் பகவானை விட்டு பிரியாத நிலை *அவிபக்ததமஸ்*. ஸ்ருஷ்டி காலத்தில் பகவானை விட்டு பிரிந்து இருப்பது *விபக்ததமஸ்*. இதற்கு மேல் *அக்ஷரம்*, *அவியக்தம்*.

4.22 ப்ரகிருதி என்பது விதை. பூமியில் இடும்போது அவிபக்ததமஸ். ஆனால் மூடின மண்ணை விட்டு பிரிந்து இருப்பது விபக்த தமஸ். நீரால் நனைந்து தளர்ந்த விதை அக்ஷரம். நீரை உறிஞ்சி பருத்து இருப்பது அவியக்தம், அதில் உண்டாகும் முளை மஹத்.

4.23 *ப்ரகிருதி* ஸ்வரூபம் அழியாத்து ஆனால் எப்போதும் மாறிக் கொண்டே இருப்பதால் வேறு ரூபத்தையும் பெயரையும் கொள்கிறது. மூலப்ரகிருதி, மூலப்பொருள், த்ரிகுணம், ப்ரதானம். அக்ஷரம், அவித்யை, மாயை என்று பல பேர்.

4.24 *ப்ரகிருதி* மோக்ஷத்திற்கு தடை. அதனால் அது அவித்யை (knowledge blocker). ஸ்வரூபத்தில் அழிவில்லாதலால் அக்ஷரம் (indestructble). ஸ்ருஷ்டிக்கு சாதனமாய் இருப்பதால் மாயை .

4.25 ப்ரகிருதியின் ஸ்வாபவம் - ஞானமில்லாதது. பிறர்க்கே இருப்பது. நித்யமாயிப்பது, எப்போதும் மறிக் கொண்டிருப்பது. ப்ரகிருதிக்கு ஸ்பர்சம் கிடையாது. அதனால் அதன் வ்யாப்திக்கு தடை இல்லை. பஞ்ச பூதங்களிலும் அது உள்ளது. ஜீவனுக்கு போகத்தை தரும் சரீரமாக உள்ளது.

4.26 *ஸத்வ குணம்* உண்மையான அறிவும் இன்பமும் தரும். (Truthfulness, honesty and deotion). *ரஜோ குணம்* ஆசை, துன்பங்களைத் தரும். (Mischievious, destructive character). *தமோ குணம்* என்பது அறியாமையை கொடுக்கும். இது கவனக் குறைவு, சோம்பல், அலுப்பு, மயக்கம் உண்டாக்கும். (greed, negligence, dormant)

4.27 மஹாப்ரளய காலத்தில் முக்குணங்களும் சமமாய் இருக்கும் (in equilibrium). பல கல்ப காலங்கள் ப்ரளயமாய் பகவான் தன்னில் எல்லாம் ஒடுக்கி இருக்குங்கால் ஸ்ருஷ்டி செய்ய இச்சை கொள்கிறான். அப்போது மூலப் ப்ரகிருதியில் ஒரு பாகம் மஹான் (gross principle or universal mind) என்ற முக்குணங்கள் கலந்த தத்துவமாக மாறுகிறது.

4.28 பகவத் இச்சையால் அந்த மஹானிலிருந்து ஒரு பகுதி அஹங்காரமாகவும் (egoism) மாறுகிறது. இந்த அஹங்காரத்திலும் ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்ற குணங்களும் உண்டு.

4.29 மூலப்ரகிருதி, மஹான், அஹங்காரம் என்பவை முதல் மூணு தத்வங்கள்.

4.30 ப்ரகிருதி தத்துவம் மூணு வகை - ப்ரகிருதி (raw material), ப்ரகிருதி விக்ருதி (intermediate product), விக்ருதி (end product).

4.31 ப்ரகிருதி என்பது மற்றொரு வஸ்துவிலிருந்து தோன்றாத தன்மை. மூலப்ரகிருதி மட்டுமே இது

4.32 ப்ரகிருதி விக்ருதி என்பது மற்ற பொருளிலிருந்து தோன்றும். அது மற்ற பொருளாகவும் மாறும். மஹான், அஹங்காரம், ஐந்து தன்மாத்ரைகளும் இது

4.33 விக்ருதி என்பது வேறு பொருளிலிருந்து தோன்றும். ஆனால் அது வேறு பொருளாக மாறாது. பஞ்ச பூதங்கள், பதினோரு இந்தரியங்கள் இந்த வகை.

4.34 காலம் என்பது ஒரு ஜடமான பொருள். பகவானின் லீலைகளுக்கு அவசியமானது. இது கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் (past, present, future).

4.35 காலத்தை ஞானத்தினால்தான் அறிய முடியும். இது பரவாத இடமே இல்லை. இது விநாடி, நிமிஷம், நாழிகை, முஹூர்த்தம், பக்ஷம், மாதம், ருது, அயனம், வருஷம் என்று பிரிகிறது.

4.36 *அஜடம்* என்பது தன்னைத் தானே காட்டும் சக்தி உடையது. இது இரண்டு வகை - *ப்ராக், ப்ரத்யக்*

4.37 *ப்ராக்* என்பது மற்றவர்க்கே உபயோகமானது (Use to others only). இது இரண்டு வகை. *நித்ய விபூதி, தர்ம பூத ஞானம்* (attributive consciousness)

4.38 *சுத்த ஸத்வம்* என்பது தமோ, ரஜோ குணக்கள் கலவாது முழுவதும் ஸத்வ குணாத்தாலே ஆனது. ஸ்வயம் ப்ரகாசமானதால் ஞானம் நிரம்பியது. ஸத்வ குணத்தாலே ஆனந்தமயமானது. காலத்தால் மாறுதல் இல்லாதது. அறிவு இல்லாதலால் இது அசேதனம். ஸ்வப்ரகாசத்தால் அஜடம்.

4.39 நித்ய விபூதியான மோஷத்தில் உள்ள வஸ்துக்கள், எம்பெருமான், முக்தர், நித்யர் இவர்களின் சரீரமும் யாவும் சுத்த ஸத்வமே. லீலாவிபூதியில் உள்ள திருக்கோயில்களும் எம்பெருமானின் பலவிதமான அர்ச்சையான ரூபங்களும் சுத்த ஸத்வம் என்கிறார்கள்.

4.40 *தர்ம பூத ஞானம்* எல்லா அத்மாவிலும் எப்போதும் கூடியது. நித்திரையிலும் அது அகலாது. தன்னை தான் என்று அறிய தர்ம பூத ஞானம் அவசியமில்லை. தங்கள் ஆத்ம ஸ்வரூபத்தையும் மற்ற வஸ்துக்களையும் இதைக் கொண்டே அறிகின்றனர். செயல், அனுபவம் எல்லாம் இத்தாலே.

4.41 ஆக, *ப்ரகிருதி, காலம், சுத்த ஸத்வம்* அசேதனங்கள். தர்ம பூத ஞானம் எப்போதும் சேதனனுடன் பிணைந்தே இருப்பதால் அதை சேதனனின் விசேஷணம் என்று சொல்லி இங்கே அதை தவிர்த்து, *அசேதன தத்துவங்கள் மூன்று* என்றனர்.

4.42 *ப்ரத்யக்* என்பது தான் அனுபவிக்கக்கூடியது (use to itself). இது *ஜீவன், ஈச்வரன்* என இரண்டு வகை

4.43 ப்ரமாணங்கள் காட்டும் தத்துவம் மூன்று - *சித், அசித், ஈச்வரன்*. (சேதனன், அசேதனம், பரம்) [God, man and nature].

4.44 *முத்திக்கு அருள் கூட மூன்றைத் தெளிமுன்னம்*
இத்திக்கால் ஏற்கும் இதம்.

- ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 3

மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் காரணம் பகவனுடைய கருணைதான். அதை அடைவதற்கு தத்துவங்கள் மூன்றையும் அறிந்து அதன் மூலம் உபாயத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

4.45 *முமுக்ஷுவாகிய சேதனனுக்கு மோக்ஷம் உண்டாம்போது*
தத்வத்ரய ஞானம் உண்டாக வேணும்

- பிள்ளைலோகாசாரியார், தத்வத்ரயம்

4.46 *போக்தா போக்யம் ப்ரேரிதாஞ்ச மத்வா*
ஸர்வம் ப்ரோக்தம் த்ரிவிதம் ப்ரஹ்மமேதத்

- உபனிஷத்

அசேதனம், சேதனன், ஈச்வரன் (அனுபவிக்கும் பொருள், அனுபவிப்பவன், அவற்றை ஏவுபவன்) இவற்றை அதன் லக்ஷணத்தைக் கொண்டே வெவ்வேறாக நல்ல சிந்தனை செய்து மூன்று தத்துவக்கள் என்றது.

4.47 சைதந்யமான அறிவை உடையது *ஜீவாத்மா*. ஜீவாத்மா உடம்பைக் காட்டிலும் வேறானது. ஜீவத்மா மற்றைய இந்திரியங்கள், மனஸ், அறிவு, புத்தி எல்லாவற்றையும் விட வேறானது. இந்த ஜீவாத்மா அணு பரிமாணமானது.

4.48 மனிதர்கள், பறவைகள், விலங்குகள், நீரில் வாழும் ஜந்துக்கள், புழு, பூச்சி, மரம், செடி கொடிகள் போன்ற அறிவுள்ள அனைத்திலும் ஜீவாத்மா உள்ளது. இவற்றை *சேதனன்* என்கிறோம். இந்த சேதனனின் ஞானம் எல்லாக் காலத்திலும் அத்துடன் சேர்ந்தே இருக்கும்.

4.49 ஜீவாத்மா அணுவானாலும் அதனுள்ளே இருக்கும் தர்ம பூத ஞானம் எல்லா இடங்களிலேயும் பரவி உள்ளது. ஒரு விளக்கின் ஒளி எல்லா இடங்களிலும் பரவி வெளிச்சம் தருமோ அதுபோலே.

4.50 சேதனன் கர்ம வினைக்கு தக்கவாறு இறந்த பிறகு சொர்க்கமோ, நரகமோ, இல்லை பூலோகத்திலேயே இன்னொரு பிறப்போ அடைகிறான். ப்ரபன்னன் மட்டும் இதற்கு விதி விலக்கு.

4.51 ஈச்வரனுக்கும், ஜீவனுக்கும் பொதுவான லக்ஷணங்கள்

- *ஆத்மத்வம்*
  - சரீரத்தோடு சேர்ந்தே இருப்பது. சரீரத்திற்கு ப்ரதி ஸம்பந்தி. ஆத்மாவை வெட்டவோ, இணைக்கவோ, நனைக்கவோ, உலர்த்தவோ, சுருக்கவோ முடியாது.
- *சேதனத்வம்*
  - அறிவுடமை. தானே ப்ரகாசிக்கக்கூடியது.
- *ப்ரத்யக்த்வம்*
  - ப்ரகாசிப்பது தனக்கே. மற்ற ஆத்மாக்களுக்கு அல்ல.
- *கர்த்ருத்வம்*
  - ஆத்மாவே காரியங்களை செய்பவர்.

4.52 *அசேதனம்* என்பது அறிவில்லாத வஸ்து. அசேதனமாகிய அனுபவிக்கும் பொருள் சந்தனம், தென்றல் காற்று போலே தனக்கின்றி பிறருடைய சுகத்திற்கேயென இருக்கும்.

4.53 அசேதனத்தை வ்யக்தம் (கண்ணுக்கு தெரிவது - பூமி, நீர், நெருப்பு போன்றவை), அவ்யக்தம் (கண்ணுக்கு தெரியாதவை - மஹத், அஹங்காரம் போன்றவை), காலம் என்றும் பிரிப்பர்.

4.54 *போக்யம்* என்பது பிறரால் எற்படுத்தப்பட்ட அனுபவம். இங்கு சேதனனுடைய அனுபவம் என்பது பராதீனமாய் பகவத் ஸங்கல்பத்தினால் ஏற்பட்டது. அது சேதனுக்கே உண்டானது. ஈச்வரனுக்கில்லை.

4.55 சேதனன் பகவானை உகப்பிக்கிறான் என்று கூறும்போது கூட செய்யும் காரியம் (கர்த்ருத்வம்) பகவானால் நியமிக்கப்பட்டது அன்றோ! சேதனனுடைய அறிவு என்பது எம்பெருமானால் அருளப்பட்டது. அதனால் வேதம் கூறும் போக்தா என்றால் அது சேதனனே.

4.56 ப்ரேரிதா என்னும் ஏவுதல் (control) காரியம் செய்வது ஈச்வரன் ஒருத்தனுக்கே. எல்லா வஸ்துக்களுக்கும் ஸ்வாமியே ஸகல வஸ்துக்களையும் ஏவ முடியும். சேதனன் ஸகல வஸ்துக்களும் ஸ்வாமி இல்லை. ஆகையால் ப்ரேரிதா (Universal Command) என்றால் அது பகவானையே சொல்லும்.

4.57 இங்கே *போக்யம்* என்பது சேதனனையும், ஈச்வரனையும் விட தனித்து பிரித்து சொன்ன அனுபவிக்கும் பொருள். சேதனன் தன்னையும் பகவானையும் அனுபவித்தாலும் அந்த சேதனனோ, பகவனோ ஒரு போக்யமான பொருள் ஆகாது.

4.58 *ப்ரேரிதா* என்னும் ஏவுபவன் எம்பெருமான் ஒருவனே. அவனே மூன்று வகையான அசேதனங்கள், மூன்று வகையான சேதனங்கள் இவற்றின் ஸ்வரூப (nature), ஸ்திதி (existence), ப்ரவ்ருத்திகளை (Actions) நடத்துகிறான்.

ஸ்வ அதீ 4ந த்ரிவித சேதந அசேதந
ஸ்வரூப ஸ்தி 2தி ப்ரவ்ருத்தி பே 4த 3ம்
- ஆளவந்தார் ஸித்தித்ரயம், எம்பெருமானார்,ஸ்ரீவைகுண்ட கத்யம்.

4.59 *ஸ்வரூபம்* என்பது அணு அளவான ஜீவன் அறிவோடு இருக்கும் தன்மை. *ஸ்திதி* என்பது ஜீவன் அழியாது நீடித்து நிற்றல். *ப்ரவ்ருத்தி* என்பது பகவானின் ஸங்கல்பத்தால் ஜீவன் உணர்ந்து ஒரு காரியத்தை செய்ய முயலுதல், முயலாமல் இருத்தல்.

4.60 ப்ரேரிதாவான பகவான் எல்லாப் பொருள்களுக்கும் *ஆதாரமாய், நியாந்தாவாய், ஸ்வாமியாய்* இருந்து அதன் பலனைத்தானே அனுபவிக்கிறான். ஸகல சேதனாசேதனங்களும் *ஆதயேமாய், நியாம்யமாய், சேஷியாய்* அவன் இட்ட வழக்காய் உள்ளது.

4.61 சேதனர்கள் விரும்பும் ஐச்வர்யம், கைவல்யம், மோக்ஷ ப்ராப்த்தி என்னும் பலன்களை அவர் அவர்கள் ஆசைக்கு தகுந்தவாறு எம்பெருமானே அருளுகிறான்.

4.62 ஈச்வர தத்துவம் காலத்தைக் கடந்தது. சேதனா சேதனங்களை தனக்கு பிரிக்க முடியாத சரீரமாக உடையது.

உடல் மிசை உயிர் என கரந்து எங்கும் பரந்துளன்
- நம்மாழ்வார், திருவாய்மொழி 1-1-7

என்றார் ஆழ்வாரும்.

4.63 ஈச்வரனே ப்ரணவத்தின் மூலம் அறியப்படுபவன். எல்லையற்ற கல்யாண குணங்களை உடையவன். எங்கும் பரவி இருப்பதும்,

தரித்து, ஏவி, ஸ்வாமியாய் இருப்பதும் ஆகிய லக்ஷணங்களால் சேதனனைவிட வேறானவன்

4.64 ஈச்வரன் ஸ்வரூப நிரூபக தர்மங்களை உடையவன் (Intrinsic qualities) -

- ஸத்யம் - மாறுதல் இல்லாதது (Truthfulness, firmness)
- ஞானம் - ஸ்வயம் ப்ரகாசமானது (omniscience)
- அனந்தம் - தேச, கால, வஸ்துக்களால் எல்லை அற்றது (unlimited by time, space or matter. Omnipresence)
- ஆனந்தம் - (bliss, everjoyful)
- அமலத்வம் - தோஷமில்லாமை (Blemishlessness)
- ஸ்ரீயப்பதித்வம் (Consort of Sree).

4.65 *மனனக மலமற மலர் மிசை எழுதரும்*
*மனன் உணர் வளவிலன் * பொறியுணர் வவையிலன் /*
*இனன் உணர் முழுநலம் * எதிர்நிகழ் கழிவினும் **
*இனன் இலன் எனனுயிர் * மிகுநரை இலனே*
- திருவாய்மொழி 1-1-2

மனத்தில் உள்ள மலங்கள் (ரஜஸ், தமஸ்) ஒழிந்தாலும் அறிய முடியாதவன். இந்திரியங்களுக்கு அப்பாற்பட்டவன். ஜ்ஞான ஆனந்தமயன். முக்காலத்திலும் இவனுக்கு சமனோ மேலோ ஒருவனும் இல்லை. அவன் என்னுடைய ஆத்மா.

4.66 *திருவுடன் அமர்ந்த தெய்வ நாயகா **
*நின் திருத்தனக்கு நீ திருவாகி **
இந்து தன் நிலவுடன் இலங்கு தன்மையினை /
*நந்துதல் இல்லா நல் விளக்காகி **
*அந்தமில் அமுத ஆழியாய் நிற்றி **
- ஸ்வாமி தேசிகன், மும்மணிக்கோவை

என்று ஸாதித்தார் தேசிகன். *நந்துதல் இல்லா* = ஸத்யம், *நல்* = அமலத்வம், *விளக்காகி* = ஞானம், *அந்தமில்* = அனந்தம், *அமுத* = ஆனந்தம், *திருவுடன் அமர்ந்த* = ஸ்ரீயப்பதித்வம்

4.67 ஈச்வரன் அதற்கு மேலே நிரூபித ஸ்வரூப விசேஷணங்களை உடையவன் (manifested characters). இவை கணக்கில் அடங்கா. ஞானம், பலம், ஐச்வர்யம். வீர்யம், சக்தி, தேஜஸ், ஸௌசீல்யம், வாத்ஸல்யம், மார்தவம் போன்றவை.

4.68 *பனிக்கடலில் பள்ளிகோளைப் பழக விட்டு ஓடி வந்து என் மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ*
தனிக்கடலே தனிச்சுடரே தனியுலகே என்று என்று
உனக்கு இடமாயிருக்க என்னை உனக்குரித்தாக்கினையே
பெரியாழ்வார் திருமொழி 5-4-9
என்ற பெரியாழ்வார் வாக்கின்படி தனக்கு பாற்கடல், பரமபதம். ஆதித்ய மண்டலத்தை இருப்பிடமாக் கொண்டவன்.

4.69 சேதனர்கள மூவகை - *பத்தர், முத்தர், நித்யர்* (bounded, liberated and everfree souls).

4.70 *பத்தர்* என்பது ஸம்ஸார ஸாகரத்தில் அழுந்திக் கிடக்கும் பிரம்மா முதல் புழு, பூச்சி வரை எல்லோருமே. முக்குணங்களுடைய செயல்களால் கர்ம வினை. அதனால் பிறப்பு இறப்பு. ஸம்ஸாரம் = "ஒன்றாய் ஒடுவது". (Perpetual bondage to universal flow)

4.71 *பத்தர்களை* சரீரத்தைக் கொண்டு நாலாய் பிரிக்கலாம் - தேவர்கள், மனிதர்கள், திர்யக் (பசு, பக்ஷி போன்றவை), ஸ்தாவரங்கள் (செடி கொடி போன்றவை).

4.72 *பத்தர்களின்* தனித் தன்மை - *அவித்யை, கர்மா, வாஸனை, ருசி, ப்ரகிருதி சம்பந்தம்* என்பது வண்டிச் சக்கரம் போல் சுற்றி சுற்றி வந்து பெருகிறது (Vicious circle). இது *கர்ம ப்ரவாகம்*.

4.73 ஜீவனுக்கு கர்மாவால் பிறப்பா?, இல்லை பிறப்பால் கர்மாவா? பீஜாங்குர ந்யாயத்தால் (Seed or tree, which came first?) இரண்டும் அநாதி. இந்த தோஷங்கள் முக்தர், நித்யருக்கு கிடையாது.

4.74 *முக்தர்கள்* முதலில் பக்தர்களாய் இருந்து பக்தி இல்லை ப்ரபத்தி உபாயத்தின் மூலம் ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபட்டு மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைந்து அங்கு மற்ற முக்தர்களுடனும், நித்யஸூரிகளுடனும் பகவானுக்கும் பிராட்டிக்கும் நித்ய கைங்கர்யம் செய்து மகிழ்பவர்.

4.75 *நித்யர்கள்* என்போர் ஸம்ஸாரத்தை என்றுமே எட்டிப் பாராதவர். ஆதிஸேஷன், கருடன், விஷ்வக்ஸேனர் போன்றவர்.

4.76 *பக்தர்கள்* பூலோகத்தில் இருப்பவர். இவர்கள் புபுக்ஷு, முமுக்ஷு என இரண்டு வகை.

4.77 *பல்வினை வன் கயிற்றால் பந்தமுற்று உழல்கின்றவரும்*
நல்வினை மூட்டிய நாரணார் பதம் பெற்றவரும்
தொல்வினை ஒன்றுமில்லாச் சோதி வானவரும் சுருதி
செல்வினை ஓர்ந்தவர் சீவர் என்று ஒதச் சிறந்தனமே
ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 26

என்று மூவகையான ஜீவர்கள் என்றார். கர்மம் என்னும் கயிறால் கட்டப்பட்டு தவிப்பவர் பக்தர். உபாயத்தை அனுஷ்டித்து மோக்ஷம் அடைந்தவர் முக்தர். ஸம்சார வாசனையே இல்லாமல் பகவானைப்போல் இருந்து அவனை அனுபவித்து மகிழ்பவர் நித்யர். வேதங்களை அறிந்து அதன் வழியே செல்லும் ஆசாரியர்கள் இதைக் காட்டினார்கள்.

4.78 *குன்றிய அறிவால் குற்றம் கொண்டு குறி மறந்த பத்தரும்*
வென்று விண் சென்று தமிழ்ப்பண் இசைக்கும் முக்தரும்
என்றும் பிரியாது இருளறியாது இணைந்திருக்கும் நித்யரும்
ஒன்றாய் சேதனன் மூவகையென ஒங்குமறை ஒலிக்கின்றதே.
என்று *ஆறும் பேறும்* என்பதில் சொன்னோம்.

4.79 *புபூக்ஷு* என்பவன் அல்பமான சுகங்களைத் தேடுபவன். *முமூக்ஷு* உயர்ந்த சுகத்தை நாடுபவன். இதில் *முமூக்ஷு* இரண்டு வகை. கைவல்யார்த்தி, ப்ரம்மானுபவத்தை விரும்புவன்.

4.80 *கைவல்யார்த்தி* தன் ஆத்மாவையே எண்ணி மகிழ்ந்திருப்பவன். பர தத்துவத்தை நினைத்து அவனையே மகிழ்ந்திருப்பவன் ப்ரம்மானுபவ தாஸன்.

4.81 ப்ரம்மத்தை அனுபவிக்க ஆசையுடைய முமுக்ஷு செய்யும் உபாயங்களால் *பக்தியோகஸ்தாதகன், ப்ரபன்னன்* என இரண்டு வகை

4.82 *பக்தியோகன்* என்பது அஷ்டாங்க யோகி. 1. யமம் (அஹிம்சை, காம, க்ரோதங்களை அடக்கல்) 2. நியமம் (சுத்தம், திருப்தி, வ்ரதம்,, தவம்) 3. ஆசனம் (பத்மாஸனம் போன்றவை 4. ப்ராணாயாமம் (மூச்சு காற்று அடக்கல்) 5. ப்ரத்யாஹாரம் (புலனடக்கம்) 6. தாரணை (எம்பெருமானின் திருமேனியை

மனதில் கொள்ளுதல்) 7. த்யானம் (இடைவிடாது பகவத் சிந்தனை) 8. சமாதி (ஸாக்ஷாத்காரம்)

4.83 பகவானே பலனும் உபாயமும் என்று நன்கு அறிந்து, அவனை உகப்பித்து, தன் கைமுதல் இல்லாத தன்மையை நினைத்து வருந்தி, அவனே கதி என்று மிக்க உறுதியுடன் ஆசாரியர், பிராட்டி மூலமாய் அவன் திருவடிகளில் ஆத்ம, பர, பல ஸமர்ப்பணத்தை செய்து, சரணாகதி மூலமாய் எம்பெருமானிடம் மோஷ ப்ராப்தியை வேண்டி அடைகிறவன் *ப்ரபன்னன்*.

4.84 இதில் *ப்ரபன்னன்* என்பவன் ஏகாந்தி, பரமேகாந்தி என இரண்டு வகை. *ஏகாந்தி* பகவானிடம் மோக்ஷமும் மற்றதும் விரும்புவன். *பரமைகாந்தி* பகவான் இட்ட கட்டளையாய் இருப்பவன். பகவானை அனுபவித்ததே புருஷார்த்தம் என்று இருப்பவன்

4.85 இந்த *பரமைகாந்தி* விரும்பும் மோஷ காலத்தால் த்ருப்தன், ஆர்த்தன் என இரண்டு வகை. *த்ருப்தன்* தேஹம் கழியும் அளவிலும் *ஆர்த்தன்* அந்த க்ஷணமே மோக்ஷத்தையும் ப்ராத்திப்பவன்.

4.86 சேதனனின் இயற்கையான ஞானத்தை ப்ரகிருதி மறைக்கிறது. அதனாலே தகாதவை செய்து மாறி மாறி பல பிறப்பும் பிறந்து அல்லல் படுகிறான்.

4.87 தன்னுள் இருக்கும் அத்மாவை சேதனன் ஒருவன் ஞானத்தால் மட்டுமே அறிய முடியும். கண்ணால், காதால், நாக்கால், மூக்கால், உணர்ச்சியால் உணர முடியாது.

4.88 ஜீவனுடைய ஆத்மா சரீரத்துடன் சேர்ந்த போது அவன், இவன், உவன், எவன் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. இவை எல்லாம் எம்பெருமானுடைய விபூதியே.

*நாம் அவன் இவன் உவன் * அவள் இவள் உவள் எவள் *
நாம் அவர் இவர் உவர் * அது இது உது எது /
வீமவை இவை உவை * அவை நலம் தீங்கவை *
ஆமவை ஆயவை ஆய் * நின்ற அவரே.*

- நம்மாழ்வார், திருவாய்மொழி 1-1-4

4.89 இதில் *ஈச்வரன்* பர தத்துவம். அது ஐந்து நிலையாய் உள்ளது.

- *பரம்* - ஸ்ரீவைகுண்டத்தில் *உள்ளவன்* (Transcendental, Surpassing everything).
- *வ்யூஹம்* - பாற்கடலில் ஸயனித்து நான்காய் பிரிந்தவன் (Emanation),
- *விபவம்* - அவதாரங்களாக அவதரித்தவன் (Incaranation, avatars),
- *ஹார்தம்* - எல்லோர் இதயத்துள்ளும் உள்ளவன் (Immanent. Inner dwelling)
- *அர்ச்சை* - கோவிலிலும் சாளக்கிராம வடிவிலும் உள்ளவன் (iconic, idol form)

*விண் மீ திருப்பாய்! மலைமேல் நிற்பாய்! கடல் சேர்ப்பாய் **
மண் மீ து உழல்வாய்! இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய்
- நம்மாழ்வார், திருவாய்மொழி 6-9-5

தன்னிச்சையில் தரித்து ஏவித் தான் முதல்வனாய்
உயர்ந்து, உறங்கி, உலாவி, உறைந்து, உகப்பாய்
என்று இதையே *உகத்தின் சுகத்தில்* சொன்னோம்.

4.90 வியூஹ வாசுதேவன் மூன்றாய் பிரிகிறான். *ஸங்கர்ஷணன்* - ஞானம் (Wisdom), பலம் (strength) கொண்டு உலகத்தை அழிக்கிறான், *ப்ரத்யும்னன்* ஐச்வர்யம் (Lordship), வீர்யம் (Virility) கொண்டு ஸ்ருஷ்டி செய்கிறான். *அநிருத்தன்* சக்தி (power), தேஜஸ் (spelndor) கொண்டு உலகத்தை காக்கிறான்.

4.91 ஸர்வ காரணமான பகவான் உள்ளே அந்தர்யாமியாய் நின்று எல்லா காரியங்களை படைக்கிறான். அவனே ஸர்வ காரணம், ஸர்வ காரியம் என்றார் ஸ்வாமி தேசிகன் தத்வ முக்தாகலாபத்தில்.

4.92 ப்ரகிருதி *மஹத்தாகவும்*, மஹத் *அஹங்காரமாகவும்* மாறுகிறது. தாமஸ அஹங்கராத்திலிருந்து 5 தன்மாத்ரைகள் (subtle elements) வழியாய் பஞ்ச பூதங்கள் (gross elements) உண்டாகிறது. ரஜோ குணம் இதற்கு துணையாக உள்ளது. தன்மாத்ரைகள் என்பது இரண்டு பூதங்களுக்கும் நடுவில் உள்ள ஸூக்ஷ்மமான ஒரு நிலை (plasma or jel state). பால் தயிராக தோய்வதற்கு சற்று முன் உள்ள நிலை போலே.

4.93 ஸ்ருஷ்டி க்ரமம் (த்ரிவ்ருத்கரணம், பஞ்சீகரணம், அஷ்டீகரணம்)
ப்ரகிருதி → மஸத் → அஹங்காரம் → சப்த தன்மாத்ரம் → ஆகாசம் → ஸ்பர்ச தன்மாத்ரம் → வாயு → ரூப தன்மாத்ரம் → தேஜஸ் → ரஸ தன்மாத்ரம் → ஜலம் → கந்த தன்மாத்ரம் → ப்ருதிவீ

4.94 பஞ்சீகரணத்திற்குபின் ஆகாசம் என்பது 1/2 பங்கு ஆகாசமும் மீதி ஒவ்வொன்றும் 1/8 பங்கு என்று வாயு, தேஜஸ், ஜலம், பூமி என்று இருக்கும். இதைபோல ஒவ்வொன்றிலும் மற்ற பூதங்கள் அடக்கம்.

4.95 ப்ரகிருதி, மஹத், அஹங்காரம் என்பவை பூதாதிகள், இதிலிருந்து பஞ்ச பூதங்கள் உண்டாகிறது. முதல் பூதம் ஆகாசம். இது சப்த தன்மாத்திரத்திலிருந்துதோன்றுகிறது. ஆகாசத்திற்கு ஒரே குணம் சப்தம். இதைப்போல் மற்றவை.

4.96 பூதங்களும் குணங்களும்

- ஆகாசம் - (1) சப்தம்
- வாயு - (2) சப்தம், ஸ்பர்சம்
- தேஜஸ் - (3) சப்தம், ஸ்பர்சம், ரூபம்
- ஜலம் - (4) சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம்
- பூமி = (5) சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம்

பூநிலாய ஐந்துமாய்ப் புனற்கண் நின்ற நான்குமாய்த்
தீ நிலாய மூன்றுமாய் சிறந்தா கால் இரண்டுமாய்
மீ நிலாயது ஒன்றுமாகி வேறு வேறு தன்மையாய்
நீ நிலாய வண்ணம் நின்னை யார் நினைக்க வல்லரே
- திருமழிசையாழ்வார், திருச்சந்த விருத்தம் 1

என்று இதையே ஆழ்வார் காட்டினார்.

4.97 எம்பெருமான் பூமி, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாஸம் எனும் பஞ்ச பூதங்களை படைத்து பின் வ்யஷ்டி ஸ்ருஷ்டி செய்கிறான். ஐந்து பூதங்களையும் கலந்து ஆண்டங்களையும், மற்றவையும் படைக்கிறான். கண்ணில் காணும் பொருள் எல்லாம் இந்த கலப்படமே. இது பஞ்சீகரணம்.
நீ ராய் நிலனாய்த் தீ யாய் காலாய் நெடுவானாய் - நம்மாழ்வார் 6-9-1

4.98 வேதம் *த்ரிவ்ருத்கரணம்* என்றது. கண்ணுக்கு தெரியாத ஆகாசம், வாயுவை புரிந்து கொள்ள அரிது என்று பஞ்சீகரணத்தில் இதை விட்டு, சுருக்கி சொன்னது வேதம் என்றார் எம்பெருமானார் ஸ்ரீ பாஷ்யத்தில். ஸ்ரீவிஷ்ணுபுராணம் இத்தோடு மஹத், அஹங்காரம் சேர்த்து *ஸப்தீகரணம்* என்றது. ஸ்வாமி தேசிகன் இத்துடன் ப்ரகிருதியும் சேர்த்து *அஷ்டீகரணம்* என்று சொல்வது விசேஷம் என்றார் ஸர்வார்த்த ஸித்தியில்.

4.99 ஸாத்விக அஹங்காரத்தால் 11 இந்திரியங்கள் உண்டாகிறது. ரஜோ குணம் இதற்கு துணையாக உள்ளது. அவை

- *கர்மேந்திரியங்கள்* - 5 (Motor organs) -- வாக், பாதம், பாணி, பாயு, உபஸ்தம். (Speech, Feet, Arms, Excretive and Procreative organs)
- *ஞானேந்திரியங்கள்* - 5 (sensory organs) -- ச்ரோத்தம்-காது, சக்ஷீஸ்-கண், க்ராணம்-மூக்கு, ரஸனம்-நாக்கு, த்வக்-உணர்ச்சி (Ear, Eye, Nose, Tongue and Skin)
- *மனஸ்* என்னும் 11 வது இந்திரியம் (Mind)

4.100 சரீரம் *அஷ்டீகரணத்தால்* செய்யப்படுகிறது (came from dust). இத்தோடு 11 இந்திரியங்கள் ஒவ்வொரு சரீரத்தையும் போய் அடைகின்றன. *ஸமஷ்டி ஸ்ருஷ்டி* என்பது மஹத், அஹங்காரம், தன்மாத்ரைகள், பஞ்ச பூதங்கள், 11 இந்திரியங்கள் இவற்றை படைப்பது. *வ்யஷ்டி ஸ்ருஷ்டி* என்பது மனிதர்கள், பறவை, போன்றவைகளை படைப்பது.

4.101 *வீண் வாதங்கள்*. சரீரமே ஆத்மா. இந்திரியமே ஆத்மா. மனஸ்ஸே ஆத்மா. ஞானமே ஆத்மா. ப்ராணனே ஆத்மா. ஆத்மாவே பரமாத்மா.

4.102 மனஸ் என்பதுதான் சரீரத்தின் உள் இந்திரியம். மற்ற 10ம் புற இந்திரியங்கள். மனஸ் என்பது இதயத்தில் மாத்திரம் உள்ளது. இது மற்ற இந்திரியங்களுக்கு பொது. contol point. ஞான இந்திரியங்கள் மனஸ்ஸோடு கூடவே கலந்து வேலை செய்கின்றன. மனஸ் அவற்றோடு கலவாதபோது மனஸ் அனுபவித்ததை நினைக்கிறது.

4.103 ஒரு காரியத்தை செய்ய தூண்டுவதே மனஸ்தான். அந்த காரியத்தை கொண்டு மனஸ்ஸிற்கு பல பெயர். அறியும்போது அது *புத்தி*. அபிமானிக்கும்போது *அஹங்காரம்*. அடைய நினைக்கும்போது *சித்தம்*. (இந்த அஹங்காரம், மஹத் அஹங்காரத்தை விட வேறு). இந்த மனஸ்தான் ஸம்ஸாரத்திற்கும், மோக்ஷத்திற்கும் காரணம்.

4.104 *யான் அறியும் சுடராகி நின்றேன் மற்றும் யாதும் இலேன்*
வானம் அமரும் திருமால் அடியேன் மற்றோர் பற்றும் இலேன்
தான் அமுதாம் அவன்தன் சரணே சரண் என்று அடைந்தேன்
மானம் இலா அடிமைப்பணி பூண்ட மனத்தினனே
- ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 14

என்று ஜீவாத்ம ஸ்வரூபத்தை சொன்னார்.

4.105 ஆக இதுவரை 24 தத்துவங்கள் - ப்ரகிருதி, மஹத், அஹங்காரம், 5 பூதங்கள், 5 தன்மாத்ரைகள், 5 கர்மேந்திர்யங்கள், 5 ஞானேந்திரியங்கள், மனஸ்.

பொங்கு ஐம்புலனும் பொறி ஐந்தும் கர்மேந்திரியம் ஐம்பூதம்
இங்கு இவ்வுயிர் ஏழ் ப்ரகிருதி மான அங்கார மனங்களே
- திருவாய்மொழி 10-7-10

என்றார் இதையே நம்மாழ்வார்.

ஐந்தும் ஐந்தும் ஐந்துமாகி அல்லவற்றுளாயுமாய்
ஐந்து மூன்று ஒன்றுமாகி நின்ற ஆதி தேவனே
- திருமழிசையாழ்வார், திருச்சந்த விருத்தம் 3

முக்குண மாயையின் மூவெட்டின் கீழ் வரு மூவகையும்
இக்குணம் இன்றி இலங்கிய காலச் சுழி இனமும்
நற்குணம் ஒன்றுடை நாகமும் நாராயணன் உடம்பாய்ச்
சிற்குணம் அற்றவை என்று உரைத்தார் எங்கள் தேசிகரே
- ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 24

ப்ரகிருதியின் கீழ் வரும் ப்ரகிருதி, விக்ருதி, ப்ரகிருதி-விக்ருதி ஆன 24 தத்துவங்கள். இந்த மூவகை குணம் இல்லாமல் இருப்பது காலம். ஸத்வ குணமே உள்ள பரமபதமும் அப்படியே. இந்த மூன்றும் எம்பெருமானுக்கு சரீரம். அறிவு என்னும் குணமில்லாதவை என்றார்.

4.106 இந்த 24 தத்துவங்களில் ப்ரகிருதியிலிருந்து எல்லாம் தோன்றி அதிலேயே எல்லாம் மறைகின்றன, எம்பெருமானின் ஸங்கல்பத்தாலே. ஆக ப்ரகிருதி என்ற தத்துவம் ஒன்றே

அழியாதது. 25ம் தத்துவம் ஜீவன், கடைசியாக 26ம் தத்துவம் ஈச்வரன்.

4.107 *புருடன் மணிவரமாகப் * பொன்றா மூலப்*
*ப்ரகிருதி மறுவாக மான் தண்டாகத் **
*தெருள் மருள் வாள் உறையாக * ஆங்காரங்கள்*
சார்ங்கம் சங்காக, மனம் திகிரியாக /
*இருடீகங்கள் இரைந்தும் சரங்களாக **
*இருபூதமாலை வனமாலையாகக் **
*கருடன் உரு ஆம் மறையின் பொருளாம் கண்ணன் **
கரிகிரிமேல் நின்று அனைத்தும் காக்கின்றானே
- ஸ்வாமி தேசிகன் அதிகார சங்கிரகம் 41

சேதனம் அசேதனம் என்னும் தத்துவங்கள் அனைத்தும் தனக்கு ஆபரணமாகவும், ஆயுதமாகவும் தரித்துள்ளான் பேரருளான். (*அஸ்த்ர பூஷணாதி ரூபங்களாய் நிற்கும் நிலை*)

4.108 ஆக ப்ரகிருதியான *அசித்*, சேதனனான *சித்*, எம்பெருமானாகிய *ஈச்வரன்* இம்மூன்றும் அழியாத தத்துவங்கள்.
இதுதான் *தத்வத்ரயம்*.

திருநாரணன் எனும் தெய்வமும் சித்து அசித்தும் என்று
பெரு நான் மறை முடி பேசிய தத்துவம் மூன்று இவை
- ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 10

ஸ்ரீமந் நாராயணன் என்னும் ஈச்வரனும், சேதனமும், அசேதனமும் என்ற மூன்று தத்துவங்களையே பெரிய நான்கு வேதாந்தங்கள் உரைக்கின்றன என்றார் ஸ்வாமி தேசிகன்

குடல் மிசை ஒன்றியும் கூடியும் நின்ற கொடுந்துயர்
உடல் மிசை தோன்றும் உயிரும் உயிர்க்கு உயிராம் இறையும்
கடல் மிசை கண்ட தரளத் திரள் அவை கோத்த பொன் நூல்
மடல் மிசை வார்த்தை அதன் பொருள் என்ன வகுத்தனமே
- ஸ்வாமி தேசிகன் அமிருத ரஞ்சனி 28

சரீரத்தோடு சேர்ந்து துன்பத்தை கொடுப்பது ப்ரகிருதி எனும் அசேதனம் கடல் போலே. அந்த சரீரத்தை நடத்தும் ஜீவாத்மா கடலில் உள்ள முத்து குவியல் போலே. அந்த ஜீவாத்மாவிற்கு அந்தர்யாமியான பகவான் முத்துக்களைக் கோத்த தங்க நூல் என்பதை ஆசாரியர்கள் ரஹஸ்யமாக் கூறியதை பிரித்துக் காட்டினோம் என்றார்.